ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2353/34 – 2023 ඔක්තෝබර් මස 10 වැනි අඟහරුවාදා – 2023.10.10
2353/34 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வடக்கு மாகாணம், மன்னார் மாவட்டம், மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவு, இல. MN/62, தோட்டவேலி கிராம அலுவலர் பிரிவுகளில் தோட்டவேலி கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.02.28 ஆந் திகதிய MN/MNN/2023/8 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:

*01.* **துண்டு ‘A’ – நயாருத்ன்பண்ணை - விஸ்தீரணம் : 1.4953 ஹெக்டயார்**

வடக்கு : (உரிமை கோருவோர் தெரியாத) தோட்டவேலிகாணி மற்றும் வீதி (பிரதேச சபை); கிழக்கு : வீதி (பிரதேச சபை) மற்றும் (ஏ. எம். மசூனால் உரிமை கோரப்பட்ட) நயாருத்ன்பண்ணை ; தெற்கு : (ஏ. எம். மசூனால் உரிமைகோரப்பட்ட நயாருத்ன்பண்ணை மற்றும் (உரிமை கோருவோர் தெரியாத) தோட்டவேலிகாணி); மேற்கு : (உரிமை கோருவோர் தெரியாத) தோட்டவேலிகாணி.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது தொடர் இல. : 4-3/11/2022/CEB/160.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2023, ஓகத்து 31.

EOG 10 - 0127

1A – G40503 – 14 (2023/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.